OS.No. 86/2018

Date : 13.11.2024

Witness Name & Rank – சிவசாமி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

1. வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பழனிகவுண்டருக்கு பாத்தியப்பட்டது, பழனிகவுண்டருக்கு இரண்டு மகன்கள் ஒருவர் ராயக்கவுண்டர் மற்றும் இன்னொருவர் கருப்பகவுண்டர். அவர்கள் இருவரும் வாய்மொழியாக பாகம்பிரித்து அனுபவித்து வந்தனர்என்றால் சரிதான், ராயக்கவுண்டருக்கு எனது தந்தையும் சேர்த்து நான்கு ஆண் வாரிசுகள், இரண்டு பெண் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தந்தைக்கு என்ன பங்கு உண்டோ அதே தான் மற்ற வாரிசுகளுக்கு உண்டு என்றால் சரிதான். 18ம் பிரதிவாதி கருப்புசாமி மற்றும் பழனிசாமி மற்றும் பழனிசாமி வாரிசுகளுடன் இருந்தும் மற்றும் 19ம் பிரதிவாதி சின்னிய கவுண்டர் வாரிசுகளிடம் இருந்து சொத்து கிரையம் பெற்றனர் என்றால் சரிதான். நாங்கள் தனித்தனியாக விவசாயம் செய்து வருகிறோம் என்றால் இல்லை, ஒன்றாக தான் விவசாயம் பார்த்து வருகிறோம். நான் இந்த வழக்கில் உட்பிரிவு செய்யப்பட்ட பட்டா, சிட்டா தனியாகவே தாக்கல் செய்துள்ளேன் என்றால் செய்துள்ளேன், ஆனால் நாங்கள் ஒன்றாக தான் விவசாயம் பார்த்து வருகிறோம். நான் சொல்வது தவறு என்றும் நாங்கள் வாய்மொழியாக பாகம் பிரித்து தனித்தனியாக விவசாயம் பார்த்து வருகிறோம் எனவே தான் சொத்து உட்பிரிவு செய்யப்பட்டு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. 18 மற்றும் 19 பிரதிவாதிகளின் கிரையப்பத்திரம் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த கிரையப்பத்திரத்தில் பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவத்தில் உள்ளதாக கிரையம் கொடுத்துவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே தனியாக தான் அனுபவித்து வருகிறோம் என்றால் இல்லை. எனவே 18 மற்றும் 19 பிரதிவாதிகளுக்கு கிரையப்பத்திரத்தின் படி சொத்துக்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. மேற்படி 18 மற்றும் 19 பிரதிவாதிகளுக்கு வாங்கிய சொத்துக்களை பொறுத்து அவர்களுக்கு பாகம் கொடுக்க எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் அவர்கள் அதிக நிலைத்தை கிரைய பத்திரத்தில் எழுதியுள்ளார்கள். நான் சொன்னது போல் அதிக நிலம் எழுதப்படவில்லை என்றும் கிரையம் செய்து கொடுத்தவர்களுக்கு

என்ன பாகம் வந்ததோ அதே தான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**13 மற்றும் 14 பிரதிவாதிகள் இளவர் என்பதால் நீதிமன்றத்தின் வாயிலாக ஏற்கனவே நீதிமன்ற பாதுகாவலராக திருமதி.தாரணி அவர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் தரப்பு குறுக்கு விசாரணை எதுவும் தகுந்த வாய்ப்பளித்தும் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் கடந்த 7 ஆண்டுகளாக விசாரணையில் இருந்து வருவதால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

(Sd/–)K.Yuvaraj ,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.